

கண்டமங்கலம் கிழக்கு ஒன்றியம், பெரிய பாபு சமுத்திரம் ஊராட்சி தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ரமேஷ் திருமண விழாவில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா. இளந்திரையன், ஒன்றியச் செயலாளர் வே.கணேசன், நகரச் செயலாளர் இரா.சக்கரை, ஒன்றியச் செயலாளர் தே.முருகவேல், இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன், தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு, ஒன்றிய துணைச் செயலாளர் முருகன், இளைஞர் அணி சுரேஷ் , ராஜசேகர் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

### அமைச்சர் துரைமுருகன் தலைமையில் - வேலூர் மாவட்டம் கீ.வ.குப்பம்

# மேல்காவனூர் இரா.தாமோதரன் இல்ல மணவிழா!

### ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. - கதிர் ஆனந்த் எம்.பி. பங்கேற்பு!

வேலூர், ஜூன் 13-

கீ. வ.குப்பம் மத்திய ஒன்றிய கழக அவைத் தலைவர் இரா.தாமோதரன் அவர்களின் இல்ல திருமணம் வருகிற 16.6.2024 ஞாயிற்று கிழமை காலை 7.30 மணிக்கு மேல் காலை 9.00 மணிக்குள்ளாக,

காட்பாடி வேலூர் நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள ரங்காலாயா திருமண்டபத்தில், இரா. தாமோதரன் அன்பு மகன் தாமோ. மேகநாதன் அன்பு மகன் மே. சபரிநாதன் (எ) ராஜி (என்ஐடி) என்ற மணமகனுக்கும், பெங்களூர் கிருஷ்ண ராஜி புரம் கங்கா வீதி கார்த்திகேயன் திருமதி ஜெயந்தி இணையரின் அன்பு மகள் கே. பூஜா (எ) நிவிதாவர்னிகா என்ற மணமகளுக்கும், நீர்வளத்துறை அமைச்சர், கழக பொதுச் செயலாளர்துரைமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

வேலூர் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ, வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் எம்.பி இவர்கள் வரவேற்புரை ஆற்றிட, கீ.வ.குப்பம் ஒன்றிய குழு தலைவரும், மத்திய ஒன்றிய கழக செயலாளர் எல். இரவிச்சந்திரன்,

கீ. வ.குப்பம் மேற்கு, கிழக்கு ஒன்றிய கழக செயலாளர்கள் கே. சீதாராமன், இரா.முருகேசன், மாநில கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் துணை செயலாளர் சி.கோபி, தலைமை பொதுக் குழு உறுப்பினர் கே.தயாளமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். வேலூர் விஐடி பல்கலைக்கழக வேந்தர் ஐயா ஜி.விசுவநாதன், தலைமைக் கழக தணிக்கை குழு உறுப்பினரும், மாவட்ட அவைத்தலைவருமான தி.அ.முகமது சகி (எக்ஸ் எம்பி), வேலூர் மாநகர செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் பா.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் வி. அமலு விஜயன் எம்.எல்.ஏ, பொதுக்குழு உறுப்பினர் வி.டி.ஜெயக்குமார் ஆகியோர் மணமக்களை வாழ்த்த உள்ளனர்.

மேலும், எல்.டி. வங்கியின் தலைவர் வெ.ஜெயராஜ், மகாதேவமலை அறங்காவலர் குழுத்தலைவர் வி.டி.ஜெயக்குமார், மாவட்ட இலக்கிய அணியின் அமைப்பாளர் சா. பரிமளம், மாவட்ட கவுன்சிலர்கள், எம். அசோக்குமார், வசந்தி சுதாசேகர், கழக வழக்கறிஞர் கோ.விஜயக்குமார். மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் துணை அமைப்பாளர் ப. கருணா (எ) கருணாநிதி, காவனூர் முன்னாள் கவுன்சிலர் கணேசன், அறங்காவல் குழுத்தலைவர் காசி நிதி, மத்திய ஒன்றிய கழக நிர்வாகிகள், எம் உதயசூரியன், சி.வேலு, கவுன்சிலர் வேலு, பாரதி, முடினாம்பட்டு கே.குப்பன், குட்டி (எ) தியாகராஜன், அசோகன், செ.குப்பம் மு. ஊராட்சி மன்றத்தலைவர்கள் வரத. எத்திராசன், வெங்கடேசன்,

சி.மதியழகன், காவனூர் ஊ.ம. துணை தலைவர் அலாம் பாய், இளைஞரணி ரீதர், ச.சிவகுமார். சொக்கலிங்கம், குணசேகரன் மற்றும் பலர் கலந்து கொள்ள மணமகனின் தந்தை முன்னாள் மாவட்ட வர்த்தகரணி துணை அமைப்பாளர், பி.டபள்யூ ஒப்பந்ததாரர்

தாமோ.மேகநாதன் நன்றி கூறுகிறார்.

### கோவையில் நடைபெறும் முப்பெரும் விழாவில்

# இராணிப்பேட்டை மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பு!

### செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்! மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி அறிவிப்பு!

இராணிப்பேட்டை, ஜூன் 13-

கோவையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் இராணிப்பேட்டை மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்க உள்ளதாக மாவட்டச் செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி தெரிவித்துள்ளார்.

இராணிப்பேட்டை பாரதி நகர் மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்ற மாவட்ட தி.மு.க.செயற்குழு கூட்டத்தில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர், மாவட்டக் கழக செயலாளர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

இதில் தி.மு.க. மாநில சுற்றுச்சூழல் அணி துணை செயலாளர் ஆர். வினோத்காந்தி ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.கண்ணையன், க.சுந்தரம், அசோகன், மாவட்ட துணைச் செயலாளர்கள் மு.சிவானந்தம், துரை மஸ்தான், குமுதா குமார் மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் சிறப்பு அழைப்பாளர்கள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கீழ்க் காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக மாவட்டச் செயலாளர்- அமைச்சர் ஆர்.காந்தி தெரிவித்துள்ளார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, வரலாற்று வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கு பாராட்டு விழா என முப்பெரும் விழாவாக கோவையில் நடைபெறவுள்ளது. இவ்விழாவிற்கு இராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்



பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் அனைத்து அணியைச் சார்ந்த நிர்வாகிகள், நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், ஊர் கிளை, உட்கிளை செயலாளர்கள், வாக்குச் சாவடி முகவர்கள், கழகத் தோழர்கள் ஆயிரக்கணக்கானோர் கோவையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் கலந்துகொள்வதென தீர்மானிக்கிறது.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை இந்தியா கூட்டணி, கழகத் தலைவர் தலைமையில் வெற்றி பெற்றது. இந்தியாவிலேயே போட்டியிட்ட அத்தனை தொகுதிகளிலும் வெற்றிப் பெற்றது தமிழகத்தில் மட்டும்தான். வரலாற்று வெற்றியை பெற்றுத்தந்த வாக்காளப் பெருமக்களுக்கும், இரவு, பகல் பாராது அயராது உழைத்து, தமிழகம் முழுவதும் சூறாவளி சுற்றுப்பயணம் செய்த முதல்வர், இந்தியாவின் வழிகாட்டிய நாயகர், கழகத்தலைவர் அமைச்சர் தளபதி அவர்களுக்கும், கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் இக்கூட்டம் மனமார்ந்த நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறது.

அதேபோன்று நமது மாவட்டத்தில் அரக்கோணம் நாடாளுமன்றத் தேர்தலில் கடுமையாக உழைத்து, அயராது பாடுபட்ட நமது மாவட்டக் கழகச் செயலாளர் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர். காந்திக்கும் மற்றும் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகளுக்கும், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்களுக்கும், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கும் உள்ளாட்சி மன்ற நிர்வாகிகளுக்கும், ஊர்கிளை, உட்கிளை செயலாளர் மற்றும் நிர்வாகிகளுக்கும், வாக்குச் சாவடி முகவர்களுக்கும் கழகத் தோழர்கள் அனைவருக்கும் வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும், விவசாயிகள், வணிகர்கள், தாய்மார்கள், இளைஞர்கள், மாணவர்கள், பொதுமக்கள் அனைவருக்கும் இக்கூட்டம் பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது.

வருகின்ற ஜூலை 10 ம் தேதி விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதி இடைதேர்தல் நடைபெறவுள்ளது. தலைமைக் கழகம் இடுகிற ஆணையை ஏற்று கழக வேட்பாளர் வெற்றிக்கு அயராது பாடுபடுவதென தீர்மானிக்கிறது.

இவ்வாறு கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு" மாவட்ட இளைஞரணி சார்பில், அரியலூர் மாவட்டம் லிங்கத்தடிமேடு வள்ளலார் கல்வி நிலையம் கே.ஆர்.வி நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் மற்றும் மதிய உணவு மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார். உடன் கழக சட்டதிட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன், பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ.இளையராஜா, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், கழக வழக்கறிஞர் கதிரவன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் எஸ்.ஆர்.முருகேசன், சுபா.ச.வசந்தபகலவன், வீர.சிவா , இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர் செயல்பாடு குறித்த ஆய்வுக் கூட்டம்

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆற்றிய கழகப்பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம், மண்டல வாரியாக நடைபெற்று வருகிறது.

தற்போது 5–வது மண்டலத்தில் உள்ள நிர்வாகிகளுக்கான ஆய்வுக் கூட்டம் எனது தலைமையில், மாநிலத் துணைச் செயலாளர் முன்னிலையில், கோவை லீ–மெரிடியன் ஹோட்டலில் கீழ்க்கண்டவாறு நடைபெற உள்ளது.

| நாள் | நேரம் | மாவட்டம் - மாநகரம் |
|---|---|---|
| 14/06/2024 வெள்ளிக்கிழமை | மாலை 4.00 மணி | நீலகிரி மாவட்டம் |
| | மாலை 4.30 மணி | திருப்பூர் வடக்கு மாவட்டம் |
| | மாலை 5.00 மணி | திருப்பூர் தெற்கு மாவட்டம் |
| | மாலை 5.30 மணி | திருப்பூர் வடக்கு & தெற்கு மாநகரம் |
| | மாலை 6.00 மணி | கோவை தெற்கு மாவட்டம் |
| | மாலை 6.30 மணி | கோவை வடக்கு மாவட்டம் |
| | மாலை 7.00 மணி | கோவை மாநகர் மாவட்டம் |

இக்கூட்டத்தில் மாவட்ட – மாநகர அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தாங்கள் பராமரித்து வரும் மினிட் புத்தகம், கழகப் பணிகள் குறித்த பத்திரிகைச் செய்திகள், புகைப்படங்கள் ஆகியவற்றுடன் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

“அன்பகம்”
சென்னை – 18.
நாள் : 11–06–2024.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

### கோவையில் ஜூன் 15ஆம் தேதி கழக முப்பெரும் விழா!

# திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

### மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் அறிக்கை!

கோவை, ஜூன் 13-

கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் “முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில்” திருப்பூர் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டுமென மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

வருகின்ற 15.06.2024ம் தேதி சனிக்கிழமை அன்று மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் தமிழகத்தில் திராவிட மாடல் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் 40க்கு 40 தொகுதிகளிலும் வெற்றிவாகை சூடவைத்த வெற்றி நாயகன், தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்குப் பாராட்டு விழா என நடைபெறும் “முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில்” திருப்பூர்வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

அதுசமயம், இக்கூட்டத்தில் திருப்பூர் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழக, வார்டு கழக, கிளைக்



கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், இந்நாள், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர்கள், நகரமன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், இந்நாள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞர் அணி, மாணவர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., வேண்டுகோள் விடுத்துள்ளார்.



திருப்பூர் வடக்கு மாவட்டம், பொங்கலூர் ஒன்றியம், உகாயனூர் ஊராட்சியில் 15வது நிதிக்குழு மான்ய திட்ட நிதியின் கீழ் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய சமுதாய நலக்கூடத்தை தலைமைச் செயற்குழு உறுப்பினர் பி.கே. கனகராஜு, உகாயனூர் ஊராட்சி மன்றத்தலைவர் ரேவதி கனகராஜ் முன்னிலையில் மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இதில் ஒன்றிய கழக செயலாளர்கள் பெ.அசோகன், சா.பாலுசாமி, மாவட்ட துணை செயலாளர், பொங்கலூர் ஒன்றிய பெருந்தலைவர் வழக்கறிஞர் எஸ்.குமார், வடக்கு மாநகர அவைத்தலைவர் க.ஈஸ்வரமூர்த்தி, வாலிபாளையம் பகுதி செயலாளர் மு.க.உசேன் உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.